# 1.அறம்

*அறம் செய விரும்பு*

என்றார் ஔவையார். அறம் என்றால் என்ன? திருவள்ளுவர் அறம் என்ற சொல்லைத் தருமம், துறவறம், தவம், அறக்கடவுள், ஆகிய பொருட்களில் பயன்படுத்தி இருக்கிறார். மேலும் அவர்

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்*
*ஆகுல நீர பிற.* (குறள் 34)

*அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்.* (குறள் 35)

அதாவது, ஒருவன் தன மனத்தில் குற்றம் இல்லாதவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே. மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத் தன்மை உடையவை என்பதும், பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இநத நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறமாகும். என்பதும் திருவள்ளுவர் வாக்குகளாகும்.

ஏன் அறம் செய்யவேண்டும்? என்பதற்கு அவர் அறம் சிறப்பையும், செல்வத்தையும் அளிக்கும். ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை. அறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடக் கெடுதியானதும் இல்லை. அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறதோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை. என்று விளக்குகிறார்.

அறங்களுள் சிறந்தவை எவை? என்ற கேள்விக்கு திரிகடுகம் ஆசிரியர்

*அலந்தார்க் கொன்று ஈந்த புகழும் துளங்கினும்*
*தன்குடிமை குன்றாத் தகைமையும் – அன்போடி*
*நாள்நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றும்*
*கேள்வியுள் எல்லாம் தலை. (திரிகடுகம் )*

என்றார். அதாவது, வறுமையினால் துன்பப்பட்டவர்க்கு அவர் விரும்பும் ஒரு பொருளை அவர்க்குத் தருவதால் உண்டாகும் புகழும், வறுமை முதலானவற்றால் தளர்ச்சி ஏற்பட்டபோதும் தன் குடிக்கேற்ற இயல்பினின்று குறையாத தன்மையும், நாள்தோறும் அன்பு மிகுந்து நட்பினரைப் பெருக்கிக் கொள்ளுதலும், ஆகிய இம்மூன்றும் கேட்கப் படும் அறங்கள் பலவற்றிலும் சிறந்தவையாகும்.

வறியவர்க்கு உதவுவதுதான் உண்மையான உதவி என்பதை வள்ளுவர்

*வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்*

*குறியெதிர்ப்பை நீரது உடைத்து.* (குறள் 221)

என்பார். ஆகவே, வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்கு கொடுப்பது எல்லாம் பயனை எதிபார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது என்பது பெறப்படும்.

மேலும்,

*குன்றி அனையாரும் குன்றுவர் குன்றுவ*
*குன்றி அனைய செயின்.* (குறள் 965)

என்பது வள்ளுவம். மலைபோல் உயர்ந்த நிலையில் உள்ளவரும் தாழ்வுக்குக் காரணமான செயல்களை ஒரு குன்றிமணி அளவு செய்தாலும் தாழ்ந்து போய்விடுவார்.

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.* (குறள் 954)

பல கோடிப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான குற்றங்களைச் செய்வதில்லை. என்றெல்லாம் அறவோர் குணங்களைச் சொல்லுவார் திருவள்ளுவர். இக்கருத்துக்களுக்கு அணி சேர்க்கும் வகையில், நாலடியார் சொல்லுவார்:

*பல நாளும் பக்கத்தா ராயினும் நெஞ்சிற்*
*சில நாளும் ஒட்டாரோடு ஒட்டார் - பல நாளும்*
*நீத்தார் எனக் கைவிடலுண்டோ நன்நெஞ்சத்து*
*யாத்தாரோடு யாத்த தொடர்பு? (நாலடியார் 214)*

*நுண்ணுனர்வினரோடு கூடி நுகர்வுடைமை*
*விண்ணுலகே யொக்கும் விழைவிற்றாம் -*
*(நாலடியார் 233, வரி 1,2)*

அறிவுடையோர் பல நாளும் தன பக்கத்தில் இருந்தும் சில நாள் கூட நடபுக் கொள்ளாதவரோடு சேரமாட்டார்கள். ஆனால் நட்போடு பல காலம் பழகியவர், பல நாள் பிரிந்து சென்ற்ர் என்பதற்காக் அவரது நட்பைக் கைவிடுவரோ? விடமாட்டார். ஏனெனில், நுண்ணிய அறிவினரோடு கூடி நட்புக் கொண்டு இன்புறுதல் விண்ணுலகில் பெறும் நல்ல இன்பத்தை ஒத்தது.

முழுமையாக நோக்கினால், அறம் சிறப்பையும், செல்வத்தையும் அளிக்கும். வாழ்க்கைக்கு அறம் நன்மை தரும். அறத்தைப் போற்றாமல் மறப்பது கெடுதியைத் தரும்., பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இநத நான்கு குற்றங்கள் செய்யாது தன்னைக் காத்துக் கொண்டு, மனத்தூய்மையுடன் வாழவேண்டும். வறியவர்க்கு அவருக்குத் தேவையான பொருள் உதவி செய்ய வேண்டும். எந்த நிலையிலும் தன தகுதிக்கு ஒவ்வாத இழி செயல்களைச் செய்யக் கூடாது., நுண்ணிய அறிவினரோடு கூடி நட்புக் கொண்டு நல வாழ்வு வாழவேண்டும். .

## 2.கல்வி

நாம் வாழ்வாங்கு வாழ கற்க வேண்டியவற்றைக் கற்க வேண்டும்.. ஒருவர் ஒரு சமுதாயத்தில் வாழ அச் சமுதாய பண்பாட்டை அறிந்து ஒழுக்கத்துடன் வாழ வேண்டும். ஒழுக்கம் இல்லாத மக்கள் ஒரு சமுதாயமாக வாழமுடியாது. அவர்கள் காட்டில் வாழும் விலங்குகளுக்கு சமமானவர்கள். யானை போன்ற ஒரு சில விலங்குகள் தவிர மற்ற விலங்குகள் சமுதாயமாக வாழ்வதில்லை. சமுதாயமாக வாழ சமுதாய உறுப்பினர்களிடம் ஓர் ஒழுங்கு தேவை.

கல்வியின் பல பயன்களுள் ஒன்று, தான் பிறந்த சமுதாயத்தின் வாழும் கலையை அறிந்து அதன்படி வாழ்வதாகும். சமுதாயம் என்றாலே அம்மக்கள் கூடித் தங்களது பொதுப் பிரச்சனைகளைப் பேசித் தீர்க்க வேண்டிய தேவை இருக்கும். அவ்வாறு கூடும் அவையில் பலவிதமான கருத்துக்கள் கண்டிப்பாக வரும். அக்கருத்துக்களில் உள்ள முரண்பாடுகளைக் களைய அச் சபையில் கற்று அடங்கிய மூத்தோர் தேவைப்படும். அவர்கள்தான் முரண்பாடுகளைக் களைந்து அச்சபை ஒரு சரியான முடிவை எடுக்க உதவ முடியும். அவ்வாறு விவாதிக்கப்படும் பொருட்களில் பொதுவாக உள்ள வசதிகளை அவரவர் தேவைக்கேற்ப பகுத்து பயன்படுத்தவும் கற்று அறிந்தவர் வேண்டும். ஆகவேதான், திரிகடுகம் ஆசிரியர்

*கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்*
*மூத்தோரை இல்லா அவைக்களனும் – பாத்துண்ணும்*
*தன்மையிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்*
*நன்மை பயத்தல் இல.* ( திரிகடுகம் 10)

என்றார். அதாவது கல்வி கற்பிக்கும் ஆசிரியர் இல்லாத ஊரில் வாழ்தலும், முரண்பாட்டைப் போக்கித் தெளிவிக்கும் கல்வி கேள்விகளில் முதிர்ந்தவர் இல்லாத அவையில் இருத்தலும், பகுத்து உண்ணும் தன்மை இல்லாதவர் அயலில் இருத்தலும் ஆகிய இம்மூன்றும் நன்மை அளிக்கமாட்டா; தீமையையே அளிக்கும்.

மேலும், அவர் கற்றவன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதைப் பின்வருமாரறு கூறுவார்:

*பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றாமை*
*கண் விழைந்து கையுறினும் காதல் பொருட்கின்மை*
*மண்விழைந்து வாழ்நாண் மதியாமை இம்மூன்றும்*
*நுண்விழைந்த நூலவர் நோக்கு.* *(திரிகடுகம் 29)*

என்பார். அதாவது, ஒரு பெண்ணே தன்னை விரும்பி வரினும் தன் நடக்கையில் மாறுபடாமையும், தன்னிடம் வந்து கையிலே அகப்பட்டது என்றாலும் மற்றவர் பொருளிடத்தே ஆசை கொள்ளாமையும், நிலம் முதலியவற்றை விரும்பி அறப்பயனை அடையாமல் வாழ்கின்ற காலத்தினை மதியாமையும் என்ற இம்மூன்றும் நுட்பமான நூல்களை உணர்ந்தவர்களின் கருத்தாகும்.

கற்றவன் ஒழுக்கம் உடையவனாக இருப்பான். எத்துணை வலிய ஈர்ப்புடையதாக இருப்பினும் அறமல்லாதவைகளைச் செய்யமாட்டான் இதையே புறநானூறும்

*புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்*
*பழி எனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்*

என்று கூறும். மேலும், கற்றவன் தன கையில் கிடைத்தது என்பதற்காக் மற்றவர் பொருள்மேல் ஆசைப்பட்டு அதைத் தானே வைத்துக் கொள்ளமாட்டான். அறவழியில் வாழ்ந்து பெற வேண்டிய பேறுகள் அனைத்தும் பெறாது வாழ் நாளை வீண் நாட்களாக்க மாட்டான்.

மேலும், கற்றவர் கடமை என்ன? என்பதைச் சிந்திப்போம். நூல்களை ஆராய்ந்து நுட்பமான பொருள்களைக் காணுதல் ஒரு முக்கியமான கடமை. அதாவது நிறைய நூல்களைப் படிக்க வேண்டும். நல்ல நூல்களைக் கண்டபொழுதெல்லாம் ஆழ்ந்து கற்க வேண்டும்.. அடுத்தாக, மற்றவர் விரும்புகிறார்கள் என்பதற்காகவே பயன் இல்லாதவற்றைச் சொல்வது தவறு. கூட்டத்தில் பேசுகின்றவர் ஒருவர் பயனற்ற ஒரு வேடிக்கைத் துணுக்கைச் சொல்ல, அதைக் கேட்டு சிலர் கைதட்டினால், உடனே அதே போன்ற பல பயனற்ற துணுக்குகளைச் சொல்லும் பழக்கமுடைய பேச்சாளர் பலர் உண்டு. இது தவறு. எத்தகைய சூழலிலும் பயன் இல்லாதவற்றைச் சொல்லல் ஆகாது. மேலும் யார் யாருக்கு எதை எதைச் சொன்னால் அவர்களுக்கு பயன் படுமோ அவற்றை அவரிடம் சொல்ல வேண்டும். திரிகடுகம் ஆசிரியர் இக்கருத்துக்களைப் பின்வருமாறு கூறுவார்:

*நுண் மொழி நோக்கிப் பொருள் கொளலும் நூற்குஏலா*
*வெண் மொழி வேண்டினும் சொல்லாமை – நன்மொழியைச்*
*சிற்றின மல்லர்கன் சொல்லலும் இம்மூன்றும்*
*கற்றறிந்தார் பூண்ட கடன். .* *(திரிகடுகம் 32)*

இத்தகைய கற்றோர் வாழும் சமுதாயம் உருவாக அச் சமுதாயத்தில் ஓர் ஆசிரியர் வேண்டும். ஆசிரியர் இருந்தால் அங்கு கற்கும் வசதி இருக்கும்; அங்கு அனைவரும் கற்று அறிந்தவர்களாக இருப்பார்கள்;. அவர்களில் சிறந்தவரே ஆட்சியில் அமர்வார்; அந்தச் சமுதாயம் வாழும், வளரும். ஆகவேதான், ஒவ்வொரு ஊரிலும் ஆசிரியர் இருக்க வேண்டும் என்றார் திரிகடுகம் ஆசிரியர்.

### 3.ஆசாரக்கோவை

பதின்எண்கிழ்கணக்கு நூல்களில் ஒரு நூல் ஆசாரக்கோவை. இது நல்ல பழக்க வழக்கங்களைப் பட்டியலிட்டுச் சொல்லும் நூலாகும். இதில் மொத்தமாக நூறு பாடல்கள் உள்ளன. இவற்றில் சொல்லப்படும் சில நாம் இன்று ஏற்றுக் கொள்ள முடியாதவையாக இருக்கலாம் என்றாலும் பொதுவாக இப்பாடல்களில் சொல்லப்பட்டவை யாவும் நல்ல பழக்கவழக்கங்கள் என்பதில் ஐயமில்லை. இந்நூலில் இருந்து சில பாடல்களைப் பார்ப்போம்:

உண்ணுங்கால் நோக்குந திசை கிழக்குக் கண்ணமர்ந்து
தூங்கான் துளங்காமை நன்கிரீஇ – யாண்டும்
பிறிதுயாது நோக்கான் உரையான் தொழுதுகொண்டு
உண்க உகாஅமை நன்கு. (ஆசாரக்கோவை 20)

ஏன் கிழக்கு திசை நோக்கி அமர்ந்து சாப்பிடவேண்டும்? என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். ஆனால் தூங்கிக் கொண்டோ, விளையாடிக் கொண்டோ உணவு உட்கொள்ளக் கூடாது. நன்கு அமர்ந்து, வேடிக்கைப் பார்க்காமல், பேசாமல் உணவை விரும்பி உண்ண வேண்டும்.

இன்று தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டு உண்ணுவதைப் பழக்கமாக கொண்டவர் சிலர். உண்ணுவதின் ருசியை உணர்ந்து உண்டால் தானே உண்டது செரிக்கும்! தொலைக்காட்சியைப் பார்த்துக்கொண்டு உண்டால் செரிக்காமலும் போகலாம் அல்லவா?

உண்ணும்போது பேசினால் அடுத்தவர் இலையில் நம் எச்சில் விழலாம் அல்லவா? உண்ணும்போது பேசினால் நமக்கு பொறை ஏறலாம் அல்லவா? ஆகவே உண்ணும்போது பேசுவது தவறல்லவா?

உண்ணும்போது தூங்கினாலும், விளையாடினாலும், நாம் உண்ட அளவே நமக்குத் தெரியாது போகும் அல்லவா? முழுமையாக பார்த்தால் உண்ணும்போது, உண்பதிலேயே முழுக் கவனம் செலுத்தவேண்டும் என்பது பெறப்படும். இதைதான் இந்த பாடல் நமக்கு உணர்த்துகிறது.

அடுத்து,

விருந்தினர் மூத்தோர் பசு சிறை பிள்ளை
இவர்க்கு ஊண் தொடுதல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையாதவர். (ஆசாரக்கோவை 21)

என்றைக்கும் ஒழுக்கத்தில் தவறாதவர் விருந்தினர், வயதினால் மூத்தவர், பசுக்கள், பறவைகள் பிள்ளைகள் என்னும் இவர்க்குத் தராது உண்ண மாட்டார். அதாவது வீட்டிற்கு விருந்தினரைக் காக்க வைத்து விட்டு நாம் சாப்பிடலாமா? நமது வீட்டில் நமது பெற்றோர் போன்ற பெரியவர்கள், குழந்தைகள் பசித்திருக்கும்போது நாம் உண்ணலாமா? நாம் வளர்க்கும் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை விட்டுவிட்டு நாம் சாப்பிடுவது முறையா? இவர்களை எல்லாம் உண்பித்து நாமும் உண்ணுவது தானே முறை..

கிடந்து உண்ணார் நின்று உண்ணார் வெள்ளிடையும்
உண்ணார்
சிறந்து மிக உண்ணார் கட்டிமேல் உண்ணார்
இரந்துஒன்றறும் தின்னற்க நின்று. (ஆசாரக்கோவை 23)

படுத்தபடி உணவை உண்ணமாட்டார். நின்ற வண்ணம் உண்ணமாட்டார். வெட்ட வெளியில் இருந்து உண்ணமாட்டார். விருப்பத்துடன் மிகுதியாக உண்ணமாட்டார். கட்டிலில் மேல் அமர்ந்து உண்ணமாட்டார். எதையும் நின்ற வண்ணம் உண்ணுதலும் கூடாது.

எதை எதை எப்போது உண்ணவேண்டும்? என்பதை அடுத்து பின்வருமாறு கூறுகிறார்:

கைப்பன எல்லாம் கடை. தலை தித்திப்ப
மெச்சும் வகையால் ஓழிந்த விடையாகத்
துய்க்க முறைவகையால் ஊண். (ஆசாரக்கோவை 25)

கசப்பானவற்றைக் கடைசியாகவும், இனிப்பான உணவை முதலிலும், மற்றவற்றை இடையிலும் உண்ணவேண்டும். நமது திருமண விழாக்களில் இப்போது கடைசியாக இனிப்பைத் தருவது பழக்கமாகி வருகிறது. அதாவது போகும்போது வாயில் இனிப்போடு செல்ல வேண்டும் என்று எண்ணுகிறார்கள்! எந்த இனிப்பை உண்டாலும் வாயை உடனே கழுவ வேண்டும்; இல்லையேல், பல்லின் மேல் உள்ள மேல்பூச்சை அது கெடுத்து விடும் என்று இன்றைய பல் வைத்தியர்கள் அறிவுரைக் கூறுவதை நாம் நினைவுகூர்வோம். அன்றே இதை அறிந்த நமது ஆசாரக்கோவை ஆசிரியர் தித்திப்பை முதலில் உண்க என்று நமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அடுத்ததாக, உண்டபின் எப்படி வாயைக் கழுவ வேண்டும் என்பதையும் அவர் கூறியுள்ளார்.

இழியாமை நன்குமிழ்ந்து எச்சிலற வாய்
அடியோடு நன்கு துடைத்து வடிவுடைத்தா
முக்காற் குடித்துத் துடைத்து முகத்துறுப்பு
ஒத்த வகையால் விரலுருத்தி வாய்பூசல்
மிக்கவர் கண்ட நெறி. (ஆசாரக்கோவை 27)

உண்டபின் வாயில் நீரை நிறைத்து அதைக் குடிக்காமல் நன்கு கொப்புளித்து எச்சில் நீங்க வாயை முழுமையாக துடைத்து, மூன்று முறை நீரைக் குடித்து, முகத்தையும், வாயையும் துடைத்தல் வேண்டும். இது சான்றோர் கண்ட நெறியாகும்.

முழுமையாக பார்க்கும்போது எவ்வாறு அமர்ந்து, எதை எதை எந்த வரிசையில் சாப்பிடவேண்டும்? பின்னர் எவ்வாறு கையையும், வாயையும் கழுவ வேண்டும்? என்பனவற்றையும் இப்பாடல்களில் ஆசிரியர் கூறுகிறார்; நாமும் நம் குழந்தைகளும் ஆசாரக்கோவையைப் படித்து நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்வோமாக.

## 4.பயனுள்ள வாழ்க்கை வாழவேண்டும்

மனிதனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு விலங்குகளின் வாழ்க்கை என்பது இரையைத் தேடுவது, இரைக் கிடைத்ததும் உண்பது, பின்னர் உறங்குவது மட்டுமே. ஆனால் மனித வாழ்க்கை அப்படியல்ல. மனிதன் தனது வாழ்க்கையில் பல பயனுள்ளவற்றைச் செயயநினைப்பான்; செய்வான்.

அதாவது ஒவ்வொரு மனிதனுக்கும் தன வாழ்க்கைக்கு என்று ஒரு குறிக்கோள் இருக்கும். இது வரை நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? எவற்றைச் சாதித்ததாக நீங்கள் நினைக்கிறீர்கள்? நீங்கள் சாதித்தவைதான் உங்கள் குறிக்கோள். உங்கள் குறிக்கோள் உயர்வானதாக இருக்கவேண்டும். *உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்* என்றார் வள்ளுவர். ஆகவே உங்கள் குறிகோள்களை உயர்வானவையாக நிர்ணயித்துக் கொண்டு அவற்றை நோக்கி முன்னேறுங்கள். அதுதான் உண்மையான மனித வாழ்க்கை.

பயன் அற்ற வாழ்க்கை வாழ்பவர் யார்? என்ற கேள்விக்கு திரிகடுகம் ஆசிரியர்

ஏவாது மாற்றும் இளன்கிளையும் காவாது
வைது எள்ளிச் சொல்லும் தலைமகனும் –
பொய்தெள்ளி
அம்மனை தேய்க்கும் மனையாளும் இம்மூவர்
இம்மைக்கு உறுதி இல்லார். (49)

என்று கூறுகிறார். பெற்றோர் செய்யச் சொன்னதைச் செய்ய மறுக்கும் மகனும், மனைவியைக் காப்பாற்றாது அவளை இகழ்ந்து பேசும் கணவனும், பொய்மையே தெளிந்து வாழ்கின்ற வீட்டில் உள்ள பொருளை அழிக்கின்ற மனைவியும் ஆகிய இம்மூவரும் இந்தப் பிறவியில் பயன் அற்றவர் ஆவர். இவ்வாறு பயனற்ற வாழ்க்கை வாழ்வோரை நாலடியார் புல்லறிவாளர், வாழ்நாளை வீணே கழிப்பவர் என்கிறது.

என்னே மற்றிவ்வுடம்பு பெற்றும் அறம் நினையார்
கொன்னே கழிப்பர் தம் வாழ்நாளை – அன்னோ
அளவிறந்த காதல் தம் ஆருயிர் அன்னார்க்
கொல இழைக்குங் கூற்றமும் கண்டு. (நாலடியார் 330)

அந்தோ! அளவற்ற அன்பினராகிய நம் அரிய உயிர் போன்றவரையும் கூற்றுவன் வந்து கவர்ந்து போவதைக் கண்டும், இவ்வரிய உடலைப் பெற்றும் பயனுள்ளவற்றைச் செய்யாது தம் வாழ்நாளை வறிதே கழித்தல் ஏனோ? அவர்தம் புல்லறிவை என்னென்பது?

மேலும் நாலடியார் சொல்லும்:

இமைக்கும் அளவில்தம் இன்னுயிர்போம் மார்க்கம்
எனைத்தானும் தாம் கண்டிருந்தும் –
தினைத்துணையும்
நன்றி புரிகல்லா நாணில் மடமாக்கள்
பொன்றிலென் பொன்றாக்கால் என்? (நாலடியார் 323)

இமைக்கும் பொழுதிலேயே உயிர் போவதைத் தம் கண் முன்னாலேயே கண்டும், ஒரு சிறிது அளவு நற்செயல்களும் செய்யாத புல்லறிவாளர்கள் இருப்பதும் சாவதும் ஒன்றுதான் என்று பயனுள்ளவற்றைச் செய்யாதவரைச் சபிக்கிறது நாலடியார்.

பயனுள்ள வாழ்க்கை வாழவேண்டும் என்பதை வள்ளுவர் நிறைய பாடல்களில் சொல்லியுள்ளார். பயனுடைய சொற்களை மட்டுமே சொல்ல வேண்டும்; பயனில்லாதவற்றைச் சொல்லக் கூடாது.

சொல்லுகச் சொல்லின் பயனுடைய; சொல்லற்க
சொல்லின் பயனிலாச் சொல். (திருக்குறள் 200)

பயனில்லாதவற்றைச் சொல்பவனை மனிதன் என்றே சொல்லமுடியாது; அவனை மக்களுள் பதர் என வேண்டும் என்கிறது வள்ளுவம்.

பயனில்சொல் பாராட்டுவானை மகனெனல்
மக்கட் பதர் எனல். (திருக்குறள் 196)

பயனுள்ளவற்றைச் சொல்வதாலும் செய்வதாலும் செய்பவருக்கு என்ன பயன்? கேட்பவருக்கு இனிமையானவையும் பயனுள்ளவையும் சொல்வதால் கேட்பவருக்கு நன்மை பயப்பதுடன் சொல்பவனுக்கும் இன்பம் தந்து நன்மையையும் பயக்கும் என்கிறார் திருவள்ளுவர:

நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன் ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல். (திருக்குறள் 97)

முழுமையாக பார்த்தால், ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். அது உயர்வானதாகவும், பயனுள்ளதாகவும், இருக்க வேண்டும். செயல்கள் எல்லாம் பயனுள்ளவையாக இருக்கவேண்டும். சொல்பவை யாவும் பயனுள்ளவையாக இருக்கவேண்டும். பயனில்லாதவற்றைச் சொல்பவனை மனிதன் என்றே சொல்லாது மக்களுள் பதர் என்றே சொல்லவேண்டும்.

ஒவ்வொரு நாளும் நமக்கு மிக வேண்டியவர்கள் இறந்து போவதைப் பார்த்தும் நற்செயல்கள் செய்யாமலும், பயனுள்ளவற்றைச் சொல்லாமலும், செய்யாமலும் இருப்பவரை உயிருடன் உள்ளவராக கருதலாமா? பயனுள்ளவற்றைச் சொல்லியும் செய்தும் வருபவர் மற்றவர்க்கு மகிழ்ச்சி அளிப்பதுடன் தானும் இன்பமும் நன்மையையும் பெறுவார். நாமும் பயனுள்ளவற்றையே பேசியும், செய்தும் இன்பமும் நன்மையையும் பெறுவோமாக.

**நன்னெறி**

நன்மை தரும் நல்வழிகளைச் சொல்லும் நூல்கள் பல தமிழிலுண்டு. அவற்றில் ஒன்று நன்னெறி. இதை எழுதியவர் 17 ஆம் நூற்றாண்டில் துறைமங்கலத்தில் வாழ்ந்த சிவபிரகாச அடிகளார். நன்னெறியில் நாற்பது பாடல்கள் உண்டு.

. அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று. (திருக்குறள் 49)

என்ற குறள் மூலம் வள்ளுவர். மற்றவர் பழிக்கும் குற்றங்கள் இல்லாத இல்வாழ்க்கையே சிறந்தது. என்று விளக்குகிறார். சிவபிரகாச அடிகளார் அத்தகைய இல்வாழ்க்கையில் கணவனும், மனைவியும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைப் பின்வருமாறு கூறுகிறார்:

காதல் மனையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒரு கருமம் செய்பவே – ஓதுகலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என்முகத்தாய் நோக்குமால்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். (நன்னெறி 6)

கணவனும் மனைவியும் எவ்வாறு செயல்பட வேண்டும்? என்ற கேள்விக்கு, முகத்தில் இரு கண்கள் இருந்தாலும் அவை காணும் காட்சி ஒன்றேதான். அது போல கணவனும் மனைவியும் இருவராக இருந்தாலும் அவர்கள் கருத்து ஒருமித்து செயல்களைச் செய்வர் என்கிறார் சிவபிரகாச அடிகளார். மேலும் அவர்,

பெரியவர்தம் நோய்போல பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க – தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிரவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (நன்னெறி 20)

ஏதாவது ஓர் உறுப்பு, நோய் கண்டு வருந்தினாலும், கண் கண்ணீர் விட்டு அழும். அதுபோல மேலோர் பிறரது துன்பத்தைத் தம் துன்பமாக எண்ணி மனம் வருந்துவார்கள். வள்ளுவர் ஒருபடி மேலேபோய் மற்றவர் மட்டுமல்ல, மற்ற எந்த உயிரின் துன்பத்தையும் அறிவுடையவர் தம் துன்பமாக கருதுவர் என்றார்.

அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தம் நோய்போல போற்றாக் கடை. (திருக்குறள் 315)

அடுத்து சிவப்பிரகாச அடிகளார் உதவி செய்வது குறித்து சொல்லும்போது, எந்தப் பலனையும் எதிர்பாராமல் உதவி செய்வதுதான் மேலோருக்கு அடையாளம் என்பார்.

கைம்மாறு உகவாமல் கற்று அறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம் செய்வர் – அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன தாம்மென்று. (நன்னெறி 27)

பல் ஆனது எந்த பலனையும் எதிர்பாராமல், கடினமான பொருட்களை மென்று தருகிறது. பண்டத்தின் சுவையை நாவே அனுபவிக்கிறது. அதேபோல மேலோர் எந்தப் பலனையும் எதிபாராமல் தம் உடலை வருத்தி பிறருக்கு உதவி புரிவார்கள்.

வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து. (திருக்குறள் 221)

திரும்ப ஏதும் கைம்மாறு செய்ய இயலாத வறியவர்க்கு தருவதுதான் ஈகை எனலாம். மற்றவர்க்கு கொடுப்பதெல்லாம் ஏதோ பலனை எதிர்பார்த்து கொடுப்பவை என்று வள்ளுவர் சொல்லி இருப்பதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

மேலும் அவர்,

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவர் – நேரிழாய்
மெய் சென்று தாக்கும் வியங்கோள் அடி தன்மேல்
கைசென்று தாங்கும் கடிது. (நன்னெறி 31)

தாக்க வரும் கோலை, கை எப்படி தான் தாங்கிக் கொள்ளுமோ, அவ்வாறு அறிவுடையோர் பிறரது துன்பத்தைத் தாம் ஏற்று காப்பாற்றுவர்.

அறிவுடையார் அன்றி அதுபெறார் தம்பால்
செறிபழியை அஞ்சார் சிறிதும் – பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே அன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சுமோ இருளைக் கண்டு. (நன்னெறி 34)

பார்வை இல்லாத கண்கள் இருட்டுக்கு அஞ்சாது. பார்வை உள்ள கண்கள்தான் இருட்டுக்கு அஞ்சும். அறிவில்லாதவன் பழிக்கு அஞ்சமாட்டான்; அறிவுள்ளவர்தான் பழிக்கு அஞ்சுவார்.

முழுமையாக பார்த்தால், இன்று நாம் கண்ட ஐந்து நன்னெறி பாடல்களில் இருந்து நாம் தெரிந்துகொள்பவை பின்வருமாறு: கணவனும் மனைவியும் இருவராக இருந்தாலும் அவர்கள் கருத்து ஒருமித்து செயல்களைச் செய்யவேண்டும்.

மேலோர் பிறரது துன்பத்தைத் தம் துன்பமாக எண்ணி மனம் வருந்துவார்கள். அதுமட்டும் அல்ல; அத்துன்பத்தை தாம் ஏற்றுக்கொண்டு காப்பாற்றுவார். மேலோர் எந்தப் பலனையும் எதிபாராமல் தேவை என்றால் தம் உடலையும் வருத்தி பிறருக்கு உதவி புரிவார்கள். பழிக்கு அஞ்சுவர். எக்காரணத்தைக் கொண்டும் பழி வரக்கூடிய செயல்களைச் செய்யமாட்டார்கள். நாமும் இந்நெறிகளைக் கடைபிடித்து நல்வாழ்வு வாழ்வோமாக.